DEPOSITION OF WITNESS

(Chapter XXIII code of Criminal Procedure)

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, ADDITIONAL MAHILA COURT, COIMBATORE.

| | | |
|---|---|---|
| Calendar | } | CC.1260 /2022 PW 3 ( LW 8 ) |
| Preliminary Register | } | |
| Name | } | அன்னம் ஆய்வாளர் |
| Father's name | } | |
| Taluk | | |
| Village | : | |
| Calling | : | |
| Religion | : | |

Solemnly affirmed in accordance with the Provisions of Act X of 1872 of the day of

**Date: 15.12.2022**

**முதல் விசாரணை**

1) நான் தற்போது துடியலுார் காவல் நிலையத்தில் காவல் ஆய்வாளராகப் பணிபுரிந்து வருகிறேன். கடந்த 13.12.2021 ம் தேதி 14.00 மணிக்கு துடியலுார் காவல் நிலைய பெண் தலைமைக்காவலர் திருமதி.தங்கமணி நிலைய அலுவலில் இருந்த போது அந்துசா அசோக் என்பவர் நிலையம் ஆஜராகிக்கொடுத்த எழுத்து மூலமான புகாரினைப்பெற்று நிலையக்குற்ற எண்.37/2021 சட்டப்பிரிவு 498(ஏ) 417, 420, 506(1) இதச மற்றும் 4 பெண்கள் வன்கொடுமைத்தடுப்புச்சட்டப்பிரிவுகளின் கீழ் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்து எனது பார்வைக்கு வைத்தார். **(முதல் தகவல் அறிக்கை அசாஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது).**

2) மேற்கண்ட வழக்கை அன்றைய தினமே நான் புலன் விசாரணைக்கு எடுத்துக்கொண்டு சம்பவ இடம் சென்று சாட்சிகள் அஞ்சுசா, அசோக்குமார் சினி, பிரவீணா, இம்மானுவேல், அஜய் மங்களமுத்து ஆகியோர்களை விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்தேன். மேற்படி சாட்சிகளை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்ததிலிருந்து சம்பவம் உண்மை என்பதால் எதிரி ரித்திக் நிலையத்தில் ஆஜரில் இருந்தவரை 13.12.2021 ம் தேதி 18.00 மணிக்கு நிலையத்தில் வைத்து கைது செய்து, உச்சநீதிமன்றக்கட்டளைகளை

கடைபிடித்தும்,நீதிமன்றக்காவலுக்கு அனுப்பி வைத்தேன். இவ்வழக்கில் புலன் விசாரணை முடித்து 14,7,2022 ம் தேதி எதிரியின் மீது குற்ற இறுதி அறிக்கை 498(ஏ), 417, 420 ,506(1) இதச மற்றும் 4 ஆப் பெண்கள் வன்கொடுமைத்தடுப்புச்சட்டப்பிரிவுகளின் படி இறுதி அறிக்கை தாக்கல் செய்தேன் .

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

1) நான் சொன்ன நேரத்தில் சொன்ன சாட்சிகளை விசாரணை செய்யவில்லை என்று சொன்னால் சரியல்ல. பொய்யான புகாரைப்பெற்று சரிவரப்புலன் விசாரணை செய்யாமல் குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. எதிரிக்கும் இந்த வழக்கிற்கும் சம்மந்தமில்லை என்று சொன்னால் சரியல்ல.